Registered as a news paper at the GPO

UNIVERSITY OF JAFFNA LIBRARY 2005 PERIODICALS DIVISION

# தெளிவு

THELIVU - YOUTHS OF JAFFNA ARCHDEACONRY, CHURCH OF CEYLON

"ஒருவன் எந்தளவு தன்னில் ஒன்றித்து உள்ளத்தில் தெளிவு பெற்றிருக் கிறானோ அந்த அளவு அதிகமானவற்றையும் மேலான வற்றையும் எளிதாகப் புரிந்து கொள்கின் றான். ஏனென்றால் அவன் இறைவனில் இருந்து அறிவின் தெளிவைப் பெறுகின்றான்."

தெளிவு - 05 | 2005 - தை - மாசி | இதழ் -01

# சமூகப் பணிகள் நீதியோடு கூடியதாக அமைதல் வேண்டும்

## ஆயர் டூலிப் டி சிக்கேரா

ஆசிய தேசத்தில் உண் டான சுனாமியின் தாக்கத்தினால்; எமது நாட்டிற்குள்ளும் பெருமளவு தாக்கத்தை உண்டு பண்ணியதை நாம் அறிவோம். இந்த இயற்கை அனர்த்தத்தினை முன்னிட்டு பல் வேறுபட்ட அமைப்புக்களும் நிவாரணபணிகளை மேற்கொள்ளுகின்றன. நிவாரண பணி தொடர்பாக திருச்சபையின் தீர்க்கதரிசன குரல் முக்கியம். சமூக சேவைகளை நாம் மேற்கொள்ளுகின்ற போது அது சமூக நீதியோடு கலந்து இருக்க வேண்டும்.

இவ்வாறு கொழும்பு மறைமாவட்ட ஆயர் அதி.வண. டுலிப் டி சிக்கேரா ஆண்டகை கருத்துத் தெரிவித்தார்.

ஆயர் மேலும் கருத்துக்களை முன்வைக்கும் போது சமூக பணிகளின் ஊடாக ஓர் உண்மை யான ஆன்மீகம் கட்டியெழுப்பப்பட வேண்டும். இச்சந்தர்ப் பங்களைப் பாவித்து நாம் எமது மறைமுகமான இலக்குகளை அடைவதற்கு முயற்சிக்கக் கூடாது.

மேலும், இப்பணிகள் அனைத்தும், திருச்சபை ஒருமைப்பாட்டை நோக்கியதாக ஒன்றிணைந்து மேற்கொள்ளப்படல் வேண்டும். இதுவே, பெறுமதி வாய்ந்ததாக அமையும்.


இந்த இயற்கை அனர்த்தம் ஒருபக்கம் இருக்க எழுகின்ற ஏனைய கருத்துக்களே மிகவும் முக்கியமாக கண்ணோக்கப்பட வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் கொபி அனானின் வருகை சம்பந்தமாக மக்கள் மத்தியில் மிகப் பெரிய சச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இவர் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பகுதிகளுக்குச் செல்ல அனுமதி மறுக்கப்பட்ட நிகழ்வு ஏற்கனவே திட்டமிட்ட ஒன்றாகவோ, அல்லது அவரது நேர அட்டவணையில் ஏற்பட்ட சிக்கல் காரணமாகவோ தடுக்கப்பட்டோ இருக்கலாம்.

எனினும், ஐ.நா. சபை செயலாளரின் வருகை இலங்கைக்கு மிகப்பெரிய வரப்பிரசாதம் ஆகும். அவர் விடுதலைப் புலிகள் பகுதிகளுக்குச் செல்வதன் மூலம் பெறும் அனுபவத்தைவிட செல்லாததன் மூலம் பெற்றுக் கொண்ட அனுபவம் மேலானது ஆகும்.

இவரைத் தடுத்த நிகழ்வு நாடு பிளவுபட்டுள்ளது என்பதை அப்பட்டமாக வெளிப்படுத்தியுள்ளது. மேலும், இலங்கை நாட்டு மக்களின் வறுமை நிலையை ஒழித்தல், நிரந்தர சமாதானத்திற்கு உழைக்க வேண்டிய தேவை போன்ற அவசியத்தை கொபி அனான் உணர்ந்து கொண்டார் என்பது தெளிவாகின்றது.

இந்த இயற்கை பேரழிவால் இழந்துள்ள இன்னுமொரு சிக்கல் நிலை வெளிநாட்டு இராணுவத்தின் வருகை ஆகும். வெளிநாட்டு இராணுவத்தினர் இங்கு மீட்புப் பணிக்காக அனுப்பப்பட்டுள்ளார்கள். இந்த மீட்புப் பணி முடிவடைந்ததும், அவர்கள் தங்கள் சொந்த தேசத்திற்கு செல்ல வேண்டும். இல்லையேல் அவர்கள் அரசியல் நோக்கத்திற்காக வந்திருக்கின்றார்கள் என்ற உண்மை வெளிப்படையாக உலகிற்குக் கூறப்பட வேண்டும் என்றார்.



இயற்கையின் சீற்றம்
டிசம்பர் 26ல் (2004)
கடல் பேரலையாக
உருவெடுத்தது - அது
பெறுமதிமிக்க
உயிர்களையும்
சொத்துக்களையும்
உடமைகளையும்
நொடிப்பொழுதில்
துவம்சம் செய்தது.
இக்கோரச் சம்பவத்தில்
உயிரிழந்தோருக்கு
அஞ்சலிகளையும்
துயருற்று இருப்போருக்கு
அனுதாபங்களையும்
தெளிவு பகிர்ந்து கொள்ளுகின்றது.



# கடவுள் இருக்கிறான் என்பதை உணர்வது இலகுவானதல்ல!

## பிரதம பேராயர்

ஆசியாவில் ஏற்பட்ட சுனாமியால் ஒரு லச்சத்தி ஐம்பதினாயிரம் பேர்களின் உயிர்களை எம்மிடம் இருந்து பிரித்துவிட்டது. இதனால் நம் விசுவாசத்தில் சோர்ந்து போகக்கூடாது.

இவ்வாறு பிரதம பேராயர் கலாநிதி றோவான் வில்லியம்ஸ் ஆண்டகை கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மன்றாடல் ஆனது எமது வாழ்வில் ஒரு மாயவித்தை போன்ற காரியங்களை நடப்பிக்காது. மனித வாழ்வில் ஏற்படும் துன்பங்கள் எமக்கு உடனடித் தீர்வையோ, நாம் எதிர்பார்க்கும் உதவியையோ அளிக்கப்போவதில்லை.

ஆனால், இவ்வனர்த்தங்களின் மத்தியில் கடவுளின் செயற்பாடு எங்கே? கடவுள் ஏன் இத்தகைய துன்பத்தை மனிதர்களுக்குக் கொடுத்தார்? என எமது மன்றாடலில் நாம் கடவுளைப் பார்த்து வினா எழுப்ப அழைக்கப்படுகின்றோம்.

மேலும், கடவுளை குறித்து சந்தேகிப்பதும், கடவுள் மீது கோபம் கொள்வதும், மனித இயல்பாகும். இது இறையியலின் அடிப்படை உண்மையாகும். மனித துன்பங்களைக் குறித்த வினாக்களுக்கு, பற்றுறுதியின் அடிப்படையில் பதிலளிக்க முடியுமே தவிர சாதாரண அறிவின் அடிப்படையில் புரிந்து கொள்ளவோ பதிலளிக்கவோ முடியாது என்றார்.



இலங்கைத் திருச்சபைகளின் தலைவர்களை, யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம், சுண்டுக்குளி சென்.ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் வரவேற்றுக் கொண்டது. திரு.டி.ஆர்.அருமைநாயகம் தலைமையில் நடைபெற்ற இவ்வரவேற்பு நிகழ்வில், ஆயர் குமார இலங்கசிங்க ஆண்டகையும், ஆயர் ஜெபநேசன் ஆண்டகையும் உரையாற்றுவதையும், அருகில் திருச்சபைத் தலைவர்கள் மற்றும் யாழ்.கிறிஸ்தவ ஒன்றிய பிரதிநிதிகள் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.

# மனித துயரங்களில் கடவுளும் பங்கெடுக்கின்றார்

## கலாநிதி தியான்சன் கார்

சுனாமி அனர்த்தத்தினால் உடன் பிறப்புக்களை இழந்து, உடமைகளை இழந்து தம்முடன் துயருறுபவராகவும், என்றுமே தம்முடன் வாழ்பவராகவும் புரிந்து கொள்ளுகின்றார்கள். கடவுள் துயர அனுபவங்கள் மத்தியில் தங்களோடு இருக்கின்றார் வேதனை அடைகின்றார் என மக்கள் உணர்கின்றார்கள்: உணராவிட்டால் உணரவைக்க வேண்டும்.

இவ்வாறு அருட் கலாநிதி தியான்சன் கார் அடிகளார் உரையாற்றினார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு விசேட இரங்கல் வழிபாட்டினை யாழ்.கிறிஸ்தவ ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்தது. இதில் உரையாற்றும்போதே அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், கடவுள் துயரத்தில் இருந்து மக்களை பாதுகாப்பவராக மட்டுமன்றி துயரங்களை மக்கள் புரிந்து கொள்ளும்படியும், அதற்கான தீர்வுகளை தாங்களே மேற்கொள்ளவும் உதவுகின்றார். எனவே, கடவுள் மரணத்தில் இருந்து மக்களைப் பாதுகாக்கின்றார் என்பதல்ல, மரணத்திற்கு அப்பாலும் செயற்படுகின்றார் என்பதை ஒவ்வொருவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

இயற்கை ஆழியினால் பாதிக்கப்படாத மக்களாகிய நாங்கள் புரிந்து கொள்ளும்போது, இதில் எங்கள் பங்கும் காரணமாக அமை...

(04ஆம் பக்கம் பார்க்க)

# குருதி கழுவிய குவலயம் தவக்கலா ஆற்றுகை

யாழ்ப்பாண திருமறைக் கலா மன்றத்தினால் வருடம் தோறும் தவக்கால ஆற்றுகை பல்வேறு தலைப்புக்களில் மேடையேற்றப் பட்டு மக்களின் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இவ்வருடம் "குருதி கழுவிய குவலயம்" என்னும் பெயரில் 14,15,17,18,19,20 திகதிகளில் முன்ற அரங்கில் தினமும் மாலை 7.00 மணிக்கு மேடையேற்றப்படவுள்ளது. இவ் வாற்றுகைக்குரிய எழுத்துரு நெறியாள்கை என்பவற்றை திரு.யோன்சன் ராஜ்குமார் செய்துள்ளார், என மன்ற ஊடகத்துறை இணைப்பாளர் செல்மர் எமில் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், முல்லைத்தீவில் 'பலிக் களம்' எனும் பெயரில் திரு.ஜி.பி.பேர்மினஸின் நெறியாள்கையில் தவக்கால ஆற்றுகை மேடையேறவுள்ளது. இவ்வாற்றுகை மாச் மாதம் 11 ஆம் திகதி அளம்பிலிலிலும், 13 ஆம் திகதி இரணைப் பாலையிலும் நடைபெறும் என்றார்.

## கொக்குவில் ஆலயத்திற்கு வீடு அன்பளிப்பு

கொக்குவில் புனித திரித்துவ ஆலயத்திற்கென, அப்பங்கைச் சேர்ந்த திருமதி G.ஜோசேப் அவர்கள், தனது ஐந்தரைப் பரப்பு காணியையும் அதிலுள்ள வீட்டையும் ஆலயத்திற்கென அன்பளிப்பு செய்துள்ளார் என, பங்குத் தந்தை எட்வேட் ஜெயராஜ் அடிகளார் தெரிவித்தார்.

இவ்வருடம் 125ஆவது ஆணடைக் கொண்டாவுள்ள புனித திரித்துவ ஆலயம், பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாகவும் பங்குத்தந்தை குறிப்பிட்டார்.

## 97வது பொதுக் கூட்டம்

யாழ்.கிறிஸ்தவ ஒன்றியத்தின் 97வது வருடாந்த பொதுக் கூட்டம் மார்ச் மாதம் 12ம் திகதி மாலை 4.30 மணிக்கு யாழ்ப்பாண வை.எம்.சி.ஏ. மண்டபத்தில் திரு. டி.ஆர்.அருமைநாயகம் தலைமையில் நடைபெறும்.


## புதிய செயலாளர்



தேசிய கிறிஸ்தவ சங்கத்தின் செயலாளராக அருட்கலாநிதி ஜயசிறி பீறிஸ் அடிகளார் பணியாற்றுகின்றார். இவர் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

இவர் இலங்கைத் திருச்சபையின் பணியாளரும், இலங்கை பிலிமத்தலாவை இறையியல் கல்லூரியின் விரிவுரையாளரும் ஆவார்.

## புதிய அதிபர்



இலங்கை பிலிமத்தலாவை இறையியல் கல்லூரியின் அதிபராகக் கடமையேற்றுள்ள அருட் கலாநிதி A.W. ஜெபநேசன் அடிகளார் பணி சிறக்க வாழ்த்துகின்றோம்.

இவர் மெதடிஸ்த திருச்சபையின் பணியாளரும், மத்திய மாகாண சபாசங்கத் தலைவரும், செங்கோல் சஞ்சிகையின் ஆசிரியரும் ஆவார்.

## பணியாளர்களின் இடமாற்றம்

- அருட்பணி எஸ்.டி.பி.செல்வன் அடிகளார், புனித மத்தியா ஆலயம் தண்ணீர் ஊற்று.
- அருட்பணி எட்வேட் ஜெயராஜ் அடிகளார், புனித இம்மானுவேல் ஆலயம், உரும்பிராய். புனித திரித்துவ ஆலயம், கொக்குவில்.
- சகோ யோவேல் இராஜரட்ணம் அருள் ஆலயம், நெளுங்குளம்.
- அருட்பணி டனியல் அடிகளார், தூய ஆவியானவர் ஆலயம், வவுனியா. அருள் ஆலயம், நெளுங்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை திருச்சபையின் தமிழ் கிறிஸ்தவ பத்திரிகை
ஆரம்பம்: 23 யூன் 2001, சென்.ஜேம்ஸ் ஆலயம், நல்லூர்.

தெளிவு
இதழ் - 21 THELIVU

## அடுத்து வரும் அலை கொடியதாகும்!

கடல் பேரலைகள் (26.12.2004) தெற்காசிய நாடுகளின் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கி ஒரு இலட்சத்தி 50 ஆயிரத்திற்கும் அதிகமான உயிர்களை காவு கொண்டது. அத்துடன் ஜீவனோபாய கடல்தொழில் உபகரணங்களையும் நாசம் புரிந்தது. கோவில்கள்- வீடுகள்- பொதுநிறுவன கட்டடங்கள் என பலவற்றையும் துவம்சம் செய்து, அவற்றில் உள்ள பொருட்கள் எல்லாவற்றையும் உடைத்தும், நொருக்கியும், சிதைத்தும், இழுத்தும் சென்றது.

இத்தகைய அழிவின் மத்தியில் மயிர் இழையில் உயிர் பிழைத்த மக்களின் அனுபவ பகிர்வுகள் மனதை உருக்கும் ஒன்றாகவே இருக்கின்றது. இந்த ஆழிப்பேரலையால் உறவுகளை இழந்து தனிமையில் இருப்போர் அதிகம். அவர்கள் இனி எமக்கு வாழ்வே இல்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். கடவுள் மீதும், மத நம்பிக்கை மீதும் சந்தேகம் எழுப்பும் மனிதர்களாகவும் இருக்கின்றார்கள். மற்றும் உடன் பிறப்புக்களையும் மரணபோராட்டத்தில் தவித்த சக மனிதர்களையும் காப்பாற்ற முடியவில்லையே என்ற குற்றப்பழி உணர்விலும் தவிக்கின்றவர்களும் இருக்கின்றார்கள்.

கடல்கோளைத் தடுத்து நிறுத்துவதற்கு யாராலும் முடியவில்லை. உயிர் சேதங்களையும், சொத்தழிப்புக்களையும் குறைத்துக் கொள்ள, சக்தியற்றதாகவே இவ்வுலகம் விளங்குகின்றது. எனினும் இனிவரக் கூடிய பேரலைகளை தடுப்பதற்கு மனிதனிடம் சக்தியுண்டு, அறிவுண்டு. அதற்கு நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும்.

கடல்பேரலை கணப்பொழுதில் வந்து சென்றுவிட்டது. இனி வரப்போகின்ற அலை நிலைக்கக்கூடியது. அது, கடல் பேரழிவைவிட கொடியதாக இருக்கும். இதற்கு முகம் கொடுக்க ஆயத்தமாக இருப்பதுடன், எதிர்த்து போராடவும், அதில் இருந்து மீளவும் சக்தி வேண்டும்.

இங்கு அடுத்துவரக்கூடிய அலை என்று குறிப்பிடுவது விரக்திநிலை- குற்றப்பழியுணர்வு-தனிமையுணர்வு - மற்றவர்களில் தங்கியிருத்தல் - கவலையை போக்கவென்று குடிபோதையில் மூழ்கியிருத்தல் - முகாம்களில் கற்பழிப்புக்கள் இடம்பெறல் - சிறுவரிடம் துஷ்பிரயோகமாக நடந்து கொள்ளல் - கல்வி கற்பதற்குரிய வழிவகை திறக்கப்படாமை - போசாக்கு குறைந்து போதல் - நிவாரணங்களில் பச்சபாதம் காட்டல் - தொழில்சார் பிரச்சினை - வறுமை இவ்வாறு அநேக அலைகள் தோன்றியுள்ளது.

இவற்றின் மத்தியில் எமக்குப் பாரிய பொறுப்புக்கள் கொடுக்கப்பட்டுள்ளது. இந்நேரத்தில் சக மனிதர்களின் ஆரோக்கிய உதவியும், ஆறுதல் வார்த்தைகளும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அவசியம். ஏனெனில் இன்று பொதுவாக தம்மைத் தனியே ஒதுக்கி வைத்துக்கொள்ளும் போக்கு வேகமாக வளர்ந்து வருகின்றது. இதனால், தற்கொலையும், மன உழைச்சலும் அதிகரிக்கின்றது. இத்தன்மை பாதிக்கப்பட்ட கரையோரப் பகுதி மக்களிடம் அதி கரிக்க வாய்ப்புக்கள் உண்டு. இதனால், அவர்களைப் பாதுகாக்க எம்மையே அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.

"சமுதாயத்திலிருந்து ஒதுங்கி வாழ்வது அதாவது, தனிப்பட்ட உணர்ச்சிகளைத் தெரிவிப்பதற்கோ, நெருக்கமான உறவை வைத்துக்கொள்ளுவதற்கோ ஒருவருமே இல்லை என்பது வியாதியை அல்லது மரணத்தை உண்டாக்கும்" இவ்வாறு டாக்டர் டேனியல் கோல்மன் கூறுகிறார்.

ஆகவே, இயற்கை தந்த துன்பம் நீங்கிப்போக, இனி தாங்களே தங்களுக்குள் துன்பத்தினை உருவாக்கிக் கொள்ளுகின்ற நிலை வரப்போகிறது. இனிவரும் காலங்களில் மனித வாழ்வு கெட்டதாகவே இருக்கும் என அச்சப்பட வைக்கின்றது. காரணம் "மனிதனுடைய செயல்கள் இந்த உலகையே மாற்றிவிடலாம், இதனால் நாம் இப்பொழுது காண்பது போல், உயிர் வாழும் இடமாக அது இராமற்போகலாம். ஏனெனில் இப்போது கூட, சாப்பிடப்போதுமான உணவின்றி ஐந்தில் ஒருவர் வறுமையிலும் கொடிய வறுமையில் வாழ்கின்றார், பத்தில் ஒருவர் கடும் ஊட்டச் சத்துக்குறைவால் அவதியுறுகிறார்கள்" என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள்.

இறைவன் மனிதனை படைத்து சுயமாக இயங்கவிட்டார். தெரிந்தெடுக்கும் உரிமையைக் கொடுத்தார். உலகைப் பாதுகாக்க கட்டளை கொடுத்தார். ஆனால், மனிதன் இந்த உரிமையைத் தவறாகப் பயன்படுத்துகிறான். இதனால் துன்பம் அதிகமாக ஏற்படுகிறது.

இயற்கை மனிதனுக்கு பகைவனாக மாறிவிட்டது. காரணம் மனிதன் இயற்கைச் சமநிலையை கெடுத்தமையே ஆகும். இறைவன் வெறும் மூளை இல்லாத ரோபோக்களாக மனிதனைப் படைக்கவில்லை. சிந்திக்கின்ற ஆற்றலுள்ள மனிதனாகவே படைத்தார். ஆனால், மனிதன் இந்த சிந்தனா சக்தியைத் தவறான வழியிலே பயன்படுத்தி இயற்கையை மாசுபடுத்துகிறான். அதனால் தான் கடல் பேரலை - பூமி அதிர்ச்சி- வெப்பம் - சூறாவளி - எரிமலை-வெள்ளப் பெருக்கு போன்றன ஏற்படுகின்றன. இங்கு யாரோ செய்யும் குற்றத்தினால் குற்றம் செய்யாதவர்களும் பாதிக்கப்படுகின்ற அவலமும் நிலவுகின்றது.

இன்று காணப்படுகின்ற அநேக துன்பங்களுக்கு மனிதனின் கட்டுப்பாடற்ற போக்கே அடித்தளமாக இருக்கிறது. போர்- கலவரம்- வறுமை- குற்றச்செயல்- பஞ்சம்- நோய் என்று நீள கூறிக்கொண்டே போகலாம். ஆனால், வயோதிபத்தினாலும், மரணத்தினாலும் ஏற்படும் துன்பங்கள் இயற்கையானது. ஏனெனில் இவை மனித தவறினால் உண்டானவை இல்லை. இது இவ்வாறு இருக்கும்போது, 'இறைவன் அன்பில்லாதவர்' என்றும், 'மனித துன்பங்களை நீக்காது மௌனமாக உறங்கிக் கொண்டு இறைவன் இருக்கிறார்' என்றும், விமர்சிப்பது சரியானதா?

மாறாக இறைவன் மனிதர்களின் கரிசனை உள்ளவராக இருக்கிறார். ".....கடவுள் அன்பாய் இருக்கிறார், நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மிடம் வைத்த அன்பு வெளிப்பட்டது" (1யோவான் 4:8-9)

ஆகவே, இழப்புக்கள் -சோர்வுகள் எம்மைச் சூழ்ந்து நெருங்கி வரும் போது, இறை நம்பிக்கையை தளரவிடாது வாழ்வை முன்னெடுத்து, இத்தவக் காலத்தை உரிய முறையில் அனுசரித்து, அழிவின் மத்தியில் ஓர் ஆக்க சக்தியுள்ளவர்களாக புது உலகைப் படைப்போம்!

- ஆசிரியர்.

# தீயசக்திகளுக்கு எதிரான போராட்டம் வேண்டும்

அருட்பணி. ஆ.வே.இயேசுதாசன்
C.S.I. ஆலயம், ஆனைக்கோட்டை.

**உலகில்** எல்லா உயிர்களும் தம்தம் மீட்புக்காகப் போராடிக்கொண்டே இருக்கின்றன. விடுதலை அடைய வேண்டுமானால் எல்லாப் படைப்புக்களும் போராடியே ஆகவேண்டும். போராட்டங்கள் எல்லாமே வெற்றியடைவதில்லை. வெற்றியடைந்த போராட்ட வரலாறுகள் நிலைத்ததுமில்லை. போராட்ட வரலாறு ஒரு கால எல்லைக்குள் முடிவதுமில்லை. போராட்டம் என்பது நீண்ட வரலாறு, போராட்ட வரலாற்றில் படைப்புக்கள் எல்லாமே பங்காளிகளாகின்றன. படைப்புக்களின் போராட்ட வரலாற்றின் துன்பபபதிவுகள் மறக்கமுடியாதவைகள்.

ஈழத் தமிழரின் விடுதலை வரலாற்றில் நம் தேசியச் சொத்தான பனைகளும் பங்காளிகளாகச் செயற்பட்டதை ஏ9 பாதையில் செல்லும் பயணிகளின் பார்வைக்கு மறைவானது அல்ல. கழுத்து வெட்டப்பட்ட பனைகள் வாழ்வு இழந்த பனைகளாகவே காணப்படுகின்றன.

ஆகையால் நமக்கு தெரிந்திருக்கிறபடி இதுவரைக்கும் படைப்பு அனைத்தும் ஒன்றாகத் தவித்து பிரசவ வேதனைப்படுகின்றது. அதுமட்டுமன்றி ஆவியின் முதல் கனிகளைப்பெற்ற நாமும்கூட நம்முடைய சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வரும்படி ஆர்வத்துடன் காத்திருந்து உங்களுக்குள்ளே தவிக்கின்றோம் *(உரோ 8:22-23)*

அதிகாரத்தை கையில் எடுத்துக்கொண்டு அடக்குமுறையினால், இல்லாதவருடைய உரிமை களைப் பறிப்பவர்களுக்கும், ஏழைகளின் உழைப்பைச் சுரண்டும் முதலாளி வர்க்கத்திற்கும், இயற்கையை அழித்து உலகின் அழகுபடுத்தப்படுவார்கள். அவ்வழகை மற்றவர்கள் பெற்றுக் கொள்ள, பெற்றுக்கொடுத்த போராட்ட வாழ்வு அவசியமாகிறது.

சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருவதற்காகிய போராட்டம் இப்போராட்டத்தினால் வரும் துன்பம் இது திருவருட்சாதனம் என்று போராடப் புறப்பட்டவர்கள். ஆவியானவரினால் உணரப்பட்டார்கள். உணரப்பட்ட உணர்வுகளின் பதிவுகள்.

கடினமான பாரத்தோடு முயற்சி செய்து.
பல முறை கண் விழித்திருக்கிறேன்
பசியிலும் தாகத்திலும் பலமுறை உபவாசங்களிலும்
குளிரிலும் நிர்வாணத்திலும் இருந்திருக்கிறேன்.
இவைமட்டு மன்றி அனைத்து சபைகளைக்
குறித்தும் உண்டாயிருக்கின்ற கரிசனை என்னை
நாள் தோறும் நெருக்குகின்றது.
ஒருவன் பலவீனனானால் நானும்
பலவீனத்தை உணருகிறதில்லையோ?
ஒருவன் இடறினால் என்மனம் எரியாதிருக்குமோ?

இந்தப் போராட்ட வரலாற்றை ஒவ்வொரு தேவபிள்ளையும் போராட்ட வாழ்வாக்க வேண்டும் என்பது வாழ்ந்த வீரர்களினதும், வாழ்ந்து கொண்டி ருக்கின்ற வீரர்களினதும் வீரர்களை எல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கின்ற மாவீரன் கிறிஸ்துவுடையதும், கிறிஸ்துவின் விடுதலைப் போராட்டத்துக்கு உந்து சக்தியாயிருந்த பரிசுத்தாவியுடையதாகவும். திருப்பணி என்பதை உணர்ந்து

அழகைக் கெடுத்துச் சொத்துச் சேர்க்கும் வியாபாரிகளுக்கும், தங்களில் அன்பு கொண்டு மற்றவர்களைத் துன்பப்படுத்தும் பூனைக்குணம் கொண்ட அன்பில்லாதவர்களுக்கும் எதிரான போராட்டம்.

சரீர மீட்பாகிய புத்திர சுவீகா ரத்தை மேற்கூறப்பட்டவர்களும் பெற்றுக்கொள்ளவேண்டும். இதைச் சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரத்தைப் பெற்றவர்கள் பெற்றுக் கொடுப்பதற்கு ஆகிய போராட்டமே! இப்போராட்டம்.

மாமிசத்தோடும் இரத்தத்தோடுமல்ல. ஆளுகை செய்பவர்களோடும் அதிகாரங்க ளோடும் இந்த இருண்ட உலகத்தின் சக்திகளோடும் வானமண்டலத்தில் உள்ள தீய ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு *(எபே6:12)*

தேவ பிள்ளைகள் ஒவ்வொரு வரும தேவ நீதிக்காய் போராட வேண்டியவர்கள் தேவபிள்ளைகள் இறைவாக்கை உடையவர்கள். வரலாற்றில் தீயசக்திகளை எதிர்த்துப் போராடினார்கள். இவர்கள் துன்பமே கண்டார்கள். காலம் கடந்து பார்க்கையில் இறை மக்கள் இன்பமே கண்டார்கள். இறை வாக்கைப் பெலமாகக் கொண்டவர்களின் ஆயுதம் இறை வாக்காகவே இருந்தது. எனவேதான் போராடியவர்களை இறைவாக்குனர் என்றார்கள். எனவே இவர்கள் போராடும் பெலத்தை யார் மூலமாய் பெற்றுக் கொண்டார்கள்?



போராட்ட வரலாற்றில் வெற்றியும் தோல்வியும் வீரனுக்கு உண்டு. வீரன் தோல்வியைச் சந்திக்கும்போது வீரன் சோர்ந்து போகக்கூடாது. சோர்வு வராமல் இருக்கவும் முடியாது. யுத்த வரலாற்றில் வீரர்களைப் பெலப்படுத்தும் பொறுப்பு அவர்களை நெறிப் படுத்தும் தலைவர்களுக்கு உண்டு.

இ∴து போன்று சரீர மீட்பாகிய புத்திர சுவீகாரம் வருவதற்கு காத்திருந்து உங்களுக்குள்ளே தவிக்கும் போராட்ட வரலாற்றில் நம்மை பெலவீனப்படும் போராட்ட வீரனை பெலப்படுத்துபவர் யார்?

பதிலைப் பவுலடிகளாரே தருகின்றார். 'எனக்கு பலமளிக்கும் கிறிஸ்துவினாலே எல்லாவற் றையும் செய்ய என்னால் முடியும் *(பிலிப் 4:13)* இறை வாக்கையுடையவராய் இருப்பவர்களுக்கு முடியாதது என்று ஒன்றுமில்லை. இறைவாக்காகிய கிறிஸ்து எல்லாப் போராட்டத்தையும் தேவ பெலத்தினாலே வெற்றியாக்கியவர்.

'ஆதலால் அவர்தாமே சோதிக் கப்பட்டுப் பாடுபட்டதினாலே அவர் சோதிக் கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறாா. *(எபிரே 2:18)*

போராட்ட வரலாற்றில் அதாவது மீட்பியல் போராட்ட வரலாற்றில் தேவநீதியை மனித வரலாறு பெற்றுக் கொள்ளும்படியாக பிதாவின் கட்டளையை நிறைவேற்ற சகல அதிகாரங்களுக்கு எதிராகப் போராடி மரணத்தையும் வென்று மரித்து உயிர்த்த மாவீரன். இவர் புதிய மானிடம். இவர் தன் போராட்ட வரலாற்றில் முதலாவது கற்றுத்தந்தது என்ன? *(லூக் 4:3-4)*

நம்முடைய நாட்டின் முன்னோர் கூறிய மரபு மொழி வாக்கியம் "ஊனன் கருமம் இழந்தான்" என்பது சாப்பாட்டை முதல் தேள்வையாகக் கொண்பவன் கடமை செய்யத் தவறுபவன். கருமமே கண்ணாக இருப்பவன். உணவை மறப்பவன்.

கடவுளுடைய வார்த்தை வரும் போது சோம்பேறி உழைப்பவனாக மாற்றப்படுவான். அப்பத்துக்காக கண்ணீர் விடுபவன் பிச்சைக்காரன். அப்பத்துக்காக உழைப்பவன் படைப்பாளி.

தேவனுடைய வார்த்தை எப்படிப்பட்டது? எல்லாவற்றையும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் உள்ளது. போராட்ட வரலாற்றில் போராடுபவர்களை பின்வாங்க விடாது முன் னோக்கித் தள்ளும் இயல்புடையது.

பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. *(ஆதி 1:2)* தேவன் எல்லாவற்றையும் ஒழுங்கு படுத்தினார். எல்லாம் அவர் சொல்ல ஆனது. இறுதியாக எல்லாம் தேவனுடைய வார்த்தையினால் அழகானது.

அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாய் இருந்தது. *(ஆதி1:31)*

தேவனுடைய வார்த்தைக்கு காத்திருப்பவர்கள் அவருடைய [illegible]ார்கள். தேவனால் செயற்படவேண்டும்.

தேவ நீதியைச் செயற்படுத்துவது கடின மான போராட்டம். தேவ நீதியை வெளிக் கொண்டு வரும் தேவ பிள்ளையாகிய போராளிகளுக்கு தேவகிருபை கூடவே நின்று செயற்படும் என்பது போராட்ட வரலாற்றில் செயற் பட்டவர்களால் உணரப் பட்டது என்பது உண்மை.

"எனவே என் குமாரனே நீ கிறிஸ்து இயேசுவிலுள்ள கிருபையில் பலப்படு'' *(2கொரி2:1)*

தேவகிருபையின் பலம் இல்லாத வர்கள் போராட முடியாது. உலக பெல மும், சரீர பெலமும் தோல்வியிலேயே முடியும். விசுவாசத் தோடு கூடிய பரிசுத்தாவியானவரால் வரும் அன்பின் பலம் வெற்றியையே உறுதிப்படுத்தும்.

வீட்டிலே வீரமாகப் போராடிக் கொண்டு இருக்கின்ற நாய்க ளுக்கு இறைச்சித்துண்டைப் போட்டுவிட்டு திருடன் கன்னமிட்டுத் திருடுவது நாம் அறிந்த வர லாறு. கன்னமிட்டுத்திருடும் திருடர்களுக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டியது இல்லத்தில் இருப்பவரின் பொறுப்பு.

பொறுப்புள்ள வீரன் விளிப் பில்லாதவனாய் இருந்தால் வெற்றியும் கிட்டாது, வீரமும் விரயமாகி விடும்.

''திருடன் திருடவும் கொல்ல வும் அழிக்கவும் மட்டுமே வருகின்றா னேயன்றி வேறொன் சக்கும் வரான்'' *(யோவான் 10:10)*

திருடருக்கும் கொலைஞர்கட்க்கும் அழிவு கண்டு ஆனந்தப் படுபவர்க்ளுக்கும் எதிரான போராட்டம் தேவ பிள்ளைகளாகிய போராளிகளின் போராட்டமாய் இருக்கட்டும். இந்தப் போராட்டம் எதற்காக என்பதை வீரன் மறந்து போகவே கூடாது.

தேவன் தன்னுடைய போராட்டம் வலு வடையாத நீதிககாக போராடும் வீரர்களைத் தன் பங்காளிகளாக்குகின்றான். வீரர்கள் தேவனுடைய நோக்கத்தை விட்டு விலகிப் போகாது பரிசுத்தாவி யானவர் வீரர்களைப் பெலப்படுத்த வேண்டும் என்று கண்ணீரோடு ஜெபிப்போமாக. கண்ணீரோடு ஜெபித்த போது போராட்ட வீரன் வீரமாய் போராடியதும், விடுதலை அடைந் ததும் வரலாறு.

ஜெபததில் நிறைந்து தேவனின் உறவில் உறைந்து வந்த மாவீரனாகிய கிறிஸ்த்துவுக்கு முன்னே வைக்கப்பட்ட முதலாவது சோதனை அழிவுக்குரிய அப்பம்.

''அப்பொழுது பிசாசு அவரை நோக்கி நீர் தேவனுடைய குமார னென்றால், இந் தக்கல் அப்பமா கும்படி சொல்லும்என்றான்'' *(லூக் 4:3)*

இநதக் கேள்வியைக் கோட்ட இவன் யார்?

இவன் இயேசுக்கிறிஸ்துவுக்கோ தந்தையும் தாயும் ஆகிய தேவனுக்கோ எல்லா வகையிலும் தேவபிள்ளைகளை நெறிப்படுத்தி வழிப் படுத்தும் பரிசுத்தாவியானவருக்கோ பிரியமானவனுமல்ல, தோழனுமல்ல. தோழனும் நண்பனுமல்லாத வனிடமிருந்து வந்த கேள்வியை மதித்து பதில் தந்தார் புதிய மானிடமாய் வந்தவர்.

தந்த பதில் எல்லாக்காலத்திலும் எல்லா இறைமக்களுக்கும் ஏற்புடையதாய் இருக்கின்றது.

விடுதலைப் போராட்ட வரலாற்றைத் தடுப்பதற்கு வல்லரசுகள் பொருளாதாரத் தடை போடும். வயிறு வறண்டால் போராட்டம் தடைப்படும் என்பது இவர்களின் முடிவு. விடிவு தேடிப் போராடும் போராட்டம் அப்பம் இல்லாவிட்டாலும் தொடரும் என்பது வரலாறு. அப்பத்தால் மாத்திரமல்ல கட்டளைத்தளபதிகளிடம் இருந்து வரும் கட்டளைகளினால் உயிர் பெறும் என்பது வரலாறு.

கிறிஸ்துவாகிய புதிய மானிடம் தொடர்ந்த மீட்பியல் போராட்டத்துக்கு கட்டளைத்தளபதியாகிய தேவன் இருந்தார். தேவனுடைய வார்த்தையே வெற்றிதரும் ஆயுதம் என்று புதிய மானிடமானவர் கண்டார். தேவபிள்ளைகளுக்கும் கற்றுத் தந்தார்.

அப்பம் அழிவை உண்டாக்கும் தேவ வார்த்தை புதிய படைப்புக்களை உருவாக்கும்.

"அழிந்து போகிற போசனத்துக்காக அல்ல நித்திய ஜீவன் வரைக்கும் நிலைத்து நிற்கிற போசனத்துக்காகவே கிரிகை நடப்பியுங்கள்'' *(யோவான் 6:27)* ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**அறுவடையோ மிகுதி வேலையாட்களோ....**

# இறைவனின் செயற்பாட்டைக் குறித்து

## மனிதன் கேள்வி எழுப்புகின்றான்!

அருட்பணி - அ.ஸ்ரீபன்

**இயற்கை** பேரழிவுகளின் மத்தியில் மனிதன் இறைவனின் செயற்பாட்டை குறித்து கேள்வி எழுப்புகின்றான். இறைவன் ஏன் இயற்கை அனர்த்தங்களின் ஊடாக மனிதனுக்கு தீங்கிழைக்கின்றார் என வினா எழுப்புகின்றார். திருப்பாடல் 77:3 இதன் மட்டில் மனிதனை இறைவன் படைத்து, மனித அனுபவங்களில் இணைவதில்லை என்கின்ற முடிவுக்கு வருகின்றனர். ஆனால் இந்த இயற்கை அனர்த்தங்களின் மத்தியில் இறைவனும் இணைந்து மனிதனுடன் துயருறுவதையும் மனித அனுபவங்களில் இணைவதையும் பார்க்கின்றோம். விடுதலைப் பயணம் 3:7 இதில் கடவுள் மனித துன்பங்களை காண்கிறார் என்பது புலனாகின்றது. யோவா 4:11 கடவுள் தம் மக்கள் மீது காட்டும் கரிசனையை காண்கின்றோம்.

இவற்றின் அடிப்படையில் மனித வாழ்வில் கடவுளின் கரிசனையை எம்மால் புரிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. எனவே இயற்கை அனர்த்தங்களின் மத்தியிலும் அவரின் கரிசனை புலப்படுகின்றது. எனினும் உலகில் நடைபெறும் எல்லா அனுபவங்களிலும் கடவுளின் செயற்பாட்டை கண்டு கொள்ள முடியாது.

குறிப்பாக விபத்து, அகால மரணம் ஒடுக்குமுறைகள் போன்றவற்றின் மத்தியில் இறைவன் தான் நேரடியாக



செயற்படாமல் இவற்றுக்கு எதிராக மனிதர்களை செயற்படுமாறு அழைக்கின்றார்.

மனிதன் தனது நாளாந்த வாழ்வில் இறைவனின் ஆற்றலை தனது வாழ்வின் ஒரு சில வெற்றிகரமான அனுபவங்களுக்குள் கட்டுப்படுத்திக் கொள்ள முயல்கின்றான். துயர் நிறைந்த அனுபவங்கள் மனிதனுக்கு உண்டாகின்ற போது, இந்த அனுபவங்களில் இறைவனின் செயற்பாட்டைக் கண்டு கொள்ள மறுக்கின்றான். 2 கொரிந்தியர் 1:9 இல் புனித பவுல் கூறுவது போல இறைவன் மரணத்தில் இருந்து மாத்திரம் பாதுகாப்பவராக அன்றி மரணத்திற்கு அப்பாலும் அவரின் செயற்பாடு உண்டு எனக் கண்டு கொள்ள அழைக்கப்படுகின்றான். துயர் நிறைந்த அனுபவங்களுக்கூடாக மக்கள் செல்லும் போது இறைவன் முற்றாக தம்மை கைவிட்டு விட்டார் என்னும் அனுபவத்தில் சோர்ந்து போகின்றனர். அதற்கு அப்பாலும் மனித செயற்பாடுகளுக்காக நாம் கடவுளில் தான் தங்கி இருக்க வேண்டும் என்றும், கடவுள் செயற்பட வல்லமையுள்ளவர் என்றும் மறந்து விடுகின்றான். எனவே எமது துயர அனுபவத்திற்கு அப்பாலும் கடவுளின் செயற்பாடு உண்டு என்பதை நாம் கண்டு கொள்ள அழைக்கப்படுகின்றோம்.

இயற்கை அனர்த்தங்களினால் மனிதன் பாதிக்கப்படுகின்ற போது மாத்திரமே தனது இயலாமையை மனிதன் உணருகின்றான். தனக்கு அப்பால் இன்னுமொரு சக்தி உள்ளது என்றும் அது தன்னிலும் பார்க்க பலம் வாய்ந்தது என்றும் மனிதன் உணருகின்றான்.

அறிவு வளர்ச்சி விஞ்ஞான வளர்ச்சி தொழிநுட்ப வளர்ச்சி போன் அனைத்து வளர்ச்சிகளின் மத்தியிலும் மனிதன் தனது அறிவும் கண்டுபிடிப்புக்களிலும் தாக்கங்களினால் உண்டாகின்ற விளைவுக்கு தீர்வாக அமைவதே அன்றி தாக் கத்தை தடுத்து நிறுத்தக் கூடிய அளவுக்கு தன்னிடம் ஆற்றலும் திறனும இல்லை. என்றும் தன் இயலாமையை உணர்ந்து கொள்கின்றான். திருப்பாடல் 8 அதனை எழுதிய ஆசிரியர் மனிதன் இறைவனுக்கு முன்பாக ஆற்றல் குறைந்தவன் என கூறி நிற்கின்றான்.

மனித துன்ப அனுபவங்கள் இறைவனைப் பற்றி பிழையான செய்திகளை நாம் கற்றுக் கொள்ளவே பிறருக்கு கூறவோ எம்மை வழிநடத்திச் [illegible]ல்லக் கூடாது. குறிப்பாக கசப்பு அனுபவங்கள் மத்தியில் எமது துன்பங்களை பிறருடன் நாம் ஒப்பிட்டு இறைவன் பாரபட்சம் உள்ளவர் என முடிவுக்கு வருகின்றோம். ஆனால் திருமறை கூறும் கடவுள் அப்படிப்பட்டவர் அல்ல. மத்தேயு 5:45- 46 இல் அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் மழையை பெய்யச் செய்து சூரியனை உதிக்கப் பண்ணுகின்றார். ஆமோஸ் 9:7 அவர்எல்லா மக்களின் மீட்பாளர் எனப் பார்க்கிறோம். இவற்றின் அடிப்படையில் இறைவன் பாரபட்சம் உள்ளவர் என மனிதன் எண்ணுவது தவறு. மேலும் மனிதன் இத்தகைய அனுபவங்களின் மத்தியில் கடவுள் தங்களை பாதுகாத்தபடியினால் தாங்கள் தூய்மையா னவர்கள் என்றோ, மரித்தவர்கள் கடவுளின் நியாயத் தீர்ப்புக்குள்ளானவர்கள் என்றோ முடிவுக்கு வருவது தவறு லூக்கா 13:1-8 நாமும் இறையரசுக்குரிய விழுமியங்களை தரிசித்துக் கொள்ளாத பட்சத்தில் இறையன்பை உணர்ந்து கொள்ளல் கடினம் எனவே துயர அனுபவங்கள் இறைவனைப் பற்றிய பிழையான கருத்துக்கள் உருவாகுவதை நாம் இடமளிக்கக் கூடாது.

துயர அனுபவங்கள் மத்தியில் மனிதன் நம்பிக்கையில் இருந்து நம்பிக்கை அற்ற நிலைக்கும், எதிர் பார்க்கும் நிலையல் இருந்து எதிர்பார்ப்பு அற்ற நிலைக்கும், மகிழ்ச்சியான அனுபவத்தில் இருந்து மகிழ்ச்சி அற்ற நிலைக்கும், ஒளி உள்ள வாழ்வில் இருந்து இருள் வாழ்விற்கும் தள்ளப்படுகின்றான். இவற்றின் மத்தியில் மனிதன் தாம் நம்பி இருந்த அனைத்து நம்பிக்கைகளையும் இழந்து, நம்பிக்கை அற்ற நிலையில் இன்னுமோர் நம்பிக்கையை நோக்கி ஓடுகின்றான். இவ்வளவு காலமும் தாம் வைத்திருந்த நம்பிக்கையில் திருப்தி காணாத மனிதன் இப் பொழுது இன்னுமொரு சக்தியை நோக்கி நகர ஆரம்பிக்கிறான்.

இயற்கை அனர்த்தங்களின் மத்தியில் மனித தவறுக்கும் தண்டனைக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு. என்பதை காணலாம். இறைவன் இயற் கையை படைத்து இயற்கையை ஆண்டு கொள்ளுமாறு அவனிடம் அதிகாரத்தைக் கொடுத்தார். ஆனால், மனிதன் இயற்கையை அழித்து கடவுள் கொடுத்த பொறுப்பில் இருந்து தன்னை விலக்கின் கொண்டான். இதன் காரணமாக இயற்கையின் இருந்து மனிதன் தீமைகளை அனுபவிக்கின்றான். தனி யொரு மனிதனின் அல்லது ஒரு சமுகத்தின் கூட்டுப் பாவத்தின் விளைவாக உலகிலேயே துன்பங்கள் ஏற்படுகின்றது. இந்தக் கூட்டுப் பாவத்தின் தாக்கமே தனிமனித துயரம் என கூறின் மிகையாகாது. இந்தத் துயர அனுபவங்களின் மத்தியில் இறைவனின் செயற்பாட்டை எமது அனுபவத்தை மாத்திரம்மையமாகக் கொண்டு நாம் கணிக்காமல் பல' அனுபவங்களின் தொகுப்பின் அடிப்படையில் இறைவனைப் பற்றிய ஓர் சரியான புரிந்துணர்வை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறிபபிட்ட ஓர் அனுபவத்தின் தாக்கத்தை விட இறைவனின் ஒட்டு மொத்த செயற்பாடு எந்தளவு இருந் தது என மனுக்குலம் கண்டுகொள்ள அழைக்கப்படுகிறது. ஒவ்வொரு துயர அனுபவத்தின் ஊடாக உண்டாகும் உணர்வு நிலையைக் கண்டுகொள்ளவும், வளர்க்கவும் அழைக்கப்படுகிறோம்.

எனவே எமது வாழ்வில் உண்டாகும். இயற்கை - செயற்கை அனர்ததங்களின் மத்தியில் இயற்கையையும் மனிதனுடைய தெரிவாகப் புரிந்து கொள்ள நாம் அழைக்கப்படுகின்றோம். புனித பவுல் முழு இயற்கையும் இறைவனைப் பெற்றெடுப்பதாக கற்ப வேதனை அடைகின்றது என்கிறார். எனவே இயற்கையில் வெளிப்படும் இறைவனை நாம் கண்டு கொள்ள இயற்கையை பராமரிக்க அழைக்கப்படுகின்றோம். ★

# மறக்க முடியாத சரித்திர நிகழ்வு!

**மார்கழி** மாதம் 26 ஆம் திகதி திருக்குடும்ப ஞாயிறு அன்று இறைவன் நோவாவின் குடும்பத்தை வெள்ளப் பெருக்கில் இருந்து எவ்வாறு பாதுகாத்தார் என அருளுரை ஆற்றினேன்.

அருளுரை ஆற்றிய அடுத்தகணமே சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்களின் அனுபவத்தை நான் தொலைக் காட்சியில் பார்வையிட்டேன். தொலைக் காட்சியில் பார்த்த அனுபவத்தினால் நேரடியாக இந்த மக்களுக்கு எப்படியாவது உதவ வேண்டும் என்ற எண்ணத்தை எனக்கு உணர்த்தியது. இந்த நினைவு அனுபவத்துடன் வாழ்ந்தபோது.

அன்று இரவு கொழும்பு குரு முதல்வரிடம் இருந்து ஒரு தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. அந்தத் தொலைபேசி அழைப்பானது என்னைத் தேசிய கிறிஸ்தவ சங்கத்தோடு இணைந்து அம்பாந்தோட்டை செல்லுமாறு பணித்தது.

நாங்கள் அம்பாந்தோட்டை, தங்கள, டிக்வெல, மாத்தளை போன்ற பிரதேசங்களுக்குச் சென்றிருந் தோம். முதன் முதலாகப் பாதிக்கப்பட்ட இந்தப் பகுதிகளைப் பார்க்கச் சென்றது திருச்சபையாகும். நாங்கள் சென்ற பிரதேசங்களில் மீட்புப் பணிகளோ, நிவாரணப் பணிகளோ நடைபெறாதபடியினால் எங்கும் மனித உடல்கள் காணப்பட்டன. விகாரைகளில் தங்கியிருந்த சிறார்கள் தங்கள் உடன்பிறப்புக்களை நினைத்து அழும் காட்சி எங்கள் உள்ளங்களை உலுக்கியது. கணவனை இழந்து தவிக்கும் விதவைப் பெண்கள் எழுப்பிய ஒப்பாரிகளும் எங்கள் உள்ளங்களை உடைத்தன. முச்சக்கர வண்டிகளில் மீன்களை அடுக்கிச் செல்வதுபோல் மனித உடல்களை அடுக்கிச்செல்லும் பரிதாப நிலையைப் பார்த்துப் புலம்பி அழுதோம்.

> ***வைத்தியசாலையில் உடல்களை வைத்துப் பரா மரிக்க இடம் போதாமையினால் ஓர் பெரிய குழியை அமைத்து அதனுள் 18 மனித சடலங்களைப் புதைத்தனர். இதிலே ஆச்சரியம் என்னவென்றால் பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதக் குருக்கள் இணைந்த ஒரு வழிபாட்டை நடாத்தினர். இங்கு புதைக்கப்பட்டிருப்பவர்கள் தமிழரா, சிங்களவரா, முஸ்லீம் களா என்று இனம் காணப்படவும் இல்லை.***

நாங்கள் கொண்டுசென்ற நிவாரணப் பொருட்களை விகாரையில் இருந்த பாதிக்கப்பட்ட மக்களிடம் கொடுத்தோம். உடன் பிறப்புக்களின் இறப்பை நினைத்துத் தவிக்கும் மக்களின் சிறப்பாக பெண்களின், சிறார்களின் துயரங்களை நாம் கண்டபோது, இறைவன் ஏன் இப்பேற்பட்ட அனுபவத்துக்கு ஊடாக மக்களை அனுப்பினார் என்கின்ற விடைகாண முடி யாது கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது. அம்பாந் தோட்டையில் 500ற்கும் மேற்பட்ட உயிரற்ற உடல்கள் வைத்தியசாலை வளாகத்தில் வைக்கப் பட்டிருந்தன.

அதன்பின் நாம் மாத்தளைப் பகுதியை நோக்கிப் பிரயாணத்தைத் தொடர்ந்தோம். அம்பாந்தோட்டைப் பகுதியில் இருந்து மாத்தளை செல்லும் பகுதியில் 23 சந்தைகள் காணப்பட்டன. ஞாயிற்றுக்கிழமையாக இருந்தமையால் ஒவ்வொரு சந்தையிலும் 250 இற்கும் மேற்பட்ட மக்கள் கூடியிருந்தனர். சுனாமியின் தாக்கத்தினால் மக்கள் அணவரும் தமது உயிரை நீருக்குக் கையழிக்கும் நிலை ஏற்பட்டது. அம்பாந்தோட்டை முதல் மாத்தளை வரையுள்ள பகுதியில் ஒவ்வொரு இல்லத்திலும் குறைந்தது ஒருவர் அல்லது இருவர் தங்கள் உயிர்களைப் பறிகொடுத்தனர். நாம் சென்று அங்குள்ள இலங்கைத் திருச்சபை, மெதடிஸ்த திருச்சபைப் பணியாளர்களிடம் எமது நிவாரணப் பொருட்களையும், பணத்தையும் கையளித்துவிட்டு கொழும்பு திரும்பினோம்.

என்னைச் சிந்திக்கவைக்க இன்னுமோர் நிகழ்வு நடைபெற்றது.

வைத்தியசாலையில் உடல்களை வைத்துப் பராமரிக்க இடம் போதாமையினால் ஓர் பெரிய குழியை அமைத்து அதனுள் 18 மனித சடலங்களைப் புதைத்தனர். இதிலே ஆச்சரியம் என்னவென்றால் பௌத்த, இஸ்லாம், கிறிஸ்தவ மதக் குருக்கள் இணைந்த ஒரு வழிபாட்டை நடாத்தினர். இங்கு புதைக்கப்பட்டிருப்பவர்கள் தமிழரா, சிங்களவரா, முஸ்லீம்களா என்று இனம் காணப்படவும் இல்லை.

ஜனவரி 10 ஆம் திகதி மறுபடியும் எனக்கு ஓர் தொலைபேசி அழைப்புக் கிடைத்தது. அதில்

இயற்கை அனர்த்தங்களால் பாதிப்படைந்த முல்லைத் தீவு, யாழ்ப்பாணம் பிரதேசங்களில் உள்ள மக்களுடன் என்னை அடையாளப் படுத்தவும், அதில் இணைந்து கொள்ளவும் யாழ்.குரு முதல்வரின் பணியில் உதவி செய்யவும் இறைவன் தந்த வாய்ப்புக்கு நன்றி செலுத்துகின்றேன். திருச்சபைப் பொறுப்புக்களும், கடமைகளும் இருநததபோதிலும் இம்மானுவேல் ஞாபகார்த்த ஆலயம் மருதானையும், சகல பரிசுத்தவான்களின் ஆலயம் புதுக் கோட்டை கொழும்பும் என்னை இந்தச் சிறப்புப் பணியில் ஈடுபட அனுமதியும் உற்சாகமும் அளித்ததை இட்டு நான் எனது நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கின்றேன்.

ஜனவரி 14,15ஆம் திகதிகளில் நாம் வன்னிப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டோம் சிறப்பாகப் பளை, உடுத்துறை, மருதங்கேணி கட்டைக்காடு வெற்றிலைக்கேணி, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளிற்குச் சென்றிருந்தோம்.

தெறகில் இருந்து ஒரு சிறிய நிலப்பகுதிக்குள் மட்டுமே நீர் உட்புகுந்ததினை நாம் அவதானித்தோம். ஆனால் வட பகுதியில் ஓர் கிராமத்தையே அழிக்கும் அளவிற்கு நீர் பிரவேசத்தினை நாம் கண்டு மிகவும் ஆச்சரியம் அடைந்தோம்.

**அருட்பணி எஸ்.ஜே.ஜெயராஜ்**
மருதானை.

அங்கு ஓர் தந்தை வெள்ள அனர்த்ததில் இருந்த தன் பிள்ளைகளின் உயிரைப் பாதுகாக்க எத்தனித்த போது எந்தப் பிள்ளையின் உயிரை பாதுகாப்பது எந்தப் பிள்ளையின் உயிரை இரையாக்குவது என்ற முடிவை எடுக்க முடியாது கலங்கி ஈற்றில் ஒரு பிள்ளையை நீருக்குப் பலி கொடுத்து மறு பிள்ளையினை பாதுகாத்தார். அவர் தனது அனுபவத்தைக் கூறியபோது எங்கள் உள்ளங்கள் உடைந்தன.

கடவுள் அழிவுக்குள்ளும் ஓர் ஆக்கத்தினை உருவாக்குபவர். என்பது திருமறை தரும் செய்தியாகும். இதன் அடிப்படையில். நோவாவின் வெள்ளப் பெருக்கின் பின்னர். ஓர் புதிய மானிடம் உருவாகியதை நாம் திருமறையில் காணலாம். இதன் அடிப்படையில் இத்தனை பேர் அழிவின் மத்தியிலும் அநேக ஆக்கங் கள் உருவாகியதை நாம் அவதானிக்கலாம் எல்லை கள் கடந்த உதவிகள். இனம், மொழி, பால், மதம் கடந்த பராமரிப்பு. மனிதனின் சக்திக்கு அப்பால் இன்னுமொரு சக்தி உண்டு என்று உணரும் நிலை போன்றவைகள் இவற்றில் இருந்து எமது ஆக்கங்களாக நாம் அவதானிக்கலாம். ★

## புலியின் சமத்துவம்

காலை, இளம்பரிதியின் இளம் சூட்டில் புத்துணர்ச்சி பெற்ற அந்தச் சிலந்தி புதிதாகப் பிறந்த நாளின் முதற்கட்டமாக தனது வலையைப் பின்ன ஆரம்பித்தது.

தோட்ட வீட்டின் வெண்பக்கச் சுவர் பனித்துளிகளில் பள பளப்பில் தோட்டம் முழுவதும் மதாளித்து வளர்ந்து இருந்த வாழைகளின் இளங்குருத்துக்கள் வெள்ளித் தகடாக தகாய்த்துக்கொண்டிருக்க, சிலந்தியின் ஈரஇழைகள் வலையாக, கோலவலைகளாக மாறிக் கொண்டிருந்தன.




தென்றல் மெலிதாக வீசியது. சிலந்தி காற்றைக் கேட்டது, "என்ன! என் வலையை அறுக்கப்பார்க்கிறாயா?"

''இல்லை... இல்லை... காலை எழுந்ததுமே உன் கடமை உணர்வு வெளிப்படுவதைக் கண்டு வியக்கின்றேன்!''

"என்ன சொல்கிறாய்?" - சிலந்தி கேட்டது.

"இல்லை... காலை எழுந்தவுடன் உன் பணி ஆரம்பித்து விட்டது. சூரியனின் நாளாந்த வேலை... உழைப்புக்குக் கொஞ்சமும் குறைச்சலில்லை... ஆனால்..'' என்று தென்றல் இழுத்தது.

"என்ன ஆனால்...?"

''இல்லை! உன் சின்னஞ்சிறு வயிற்றுக்கு இம் மாபெரும் உழைப்பு அவசியமா? உன் உழைப்பு அஹிம்சைக்கு அழைப்பு அல்லவா விடுக்கிறது...''

சிலந்தி வாய்விட்டுச் சிரித்தது.

"நீயும் என்ன மனிதன போல் சிந்திக்கத் தொட ங்கிவிட்டாயா? எனக்காக மட்டுமா நான் உழைக்கிறேன். ஏன்? உனக்கு.... உன்னால் வாழும் உயிர்களுக்கும் சேர்த்தல்லவா உழைக்கிறேன்"

"என்ன!" வியப்பின் உச்சியில் தென்றல் சிரித்தது.

-சிலந்தியின் சினம் உச்சிக்கேறியது. "எதற்குச் சிரிக்கிறாய்?" நான் வளிமண்டலத்தை தூய்மை செய்கிறேன். அழுக்குகளை... மாசுகளை வடிகட்டி மனித குலத்துக்கு மட்டுமல்ல... உயிரினங்கள் அனைத்துக்கும் என்னளவில் உதவிக் கொண்டிருக்கிறேன். பார் இப்போது பளபளப்பாக இருக்கும் என் வலைகள் கொஞ்ச நாட்களில... ஏன்.. கொஞ்ச நேரத்தில் கூட கன்னங்கரேலென மாறிவிடும்... இவை யெல்லாம் உயிரினத்தின் நச்சுப் பொருட்கள்... ஏன் நீ கூட நஞ்சா... அமிர்தமா என்று பார்க்காமல் எங்கும் மாசினைப் பரப்புகிறாய்... நான் என் வலைகள் மூலம் வடிகட்டித் தூய்மையாக்குகிறேன்.

-தென்றல் குறும்பாகக் கேட்டது, "அப்படியென்றால் உன் வலை யில் வந்துவிழும் பூச்சிகளை நீ கொன்று உண்ணுகிறாயே..." இதற்கு என்ன சொல்லுகிறாய்?"

-சிலந்தி இறுமாப்புடன் கூறியது: "அந்தப் பூச்சிகள் பயிரினங்களை அழிப்பவை... விளைச்சல்களை தின்றொழிப்பன. ஏன் இந்த வாழையின் குருக்கத்தி நோய்வர இந்தப் பூச்சிகள்.. பக்றீயாக்கள்.. காரணமாகின்றன. இவைகளை உணவாக்கி பயிரினங்களைக் காக்கின் றேன்.... அதனால் உயிர் நிலத்தில் நிலைக கிறது. உயிரின் சம நிலை பாதுகாக்கப்படுகிறது. சமநிலை குலைந்தால் வளிமட்டுமல்ல... நீர்... நிலம் எல்லாமே மனிதனுக்கு பயங்கர எதிரியாகிவிடும்"

- தென்றல் வாயடைத்து ஸ்தம்பித்தது. அப்போது அங்கு பறந்து வந்த காகம் - "புரிகிறதா? யார் எதிரி? யார் நண்பன்? என்பது தெரிகிறதா? - என்று கூறியவாறு வாழையிலையில் அமர்ந்து ஊஞ்சலாடியது.

*செம்பியன் செல்வன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மணி நேரம் விழித்திருக்க உனக்கு வலுவில்லையா?

இறந்தவர்கள் எல்லாம் பாவிகள். இருப்போர்கள் எல்லாம் நீதிமான்கள், என்று எண்ணி இருப்போரே உங்களுக்கு ஐயோ கேடு, துன்புறும் இதயங்களின் காலங்களை ஆற்றவேண்டிய பணிகளில் ஈடுபடும் எல்லோரும் சுய மீட்டலில் தமது பணிக்கு பெறும் ஊதியத்துக்காக மட்டும் கடமை பார்ப்போராய், தம்மை ஓர் கொடை வள்ளல்களாக எண்ணிக்கொள்ளாது, எமக்குக் கிடைத்த சந்தர்ப்பமாக அரும் பணியாக எண்ணி தாழ்ச்சியில் சீடருக்கு பாதங்கழுவிய குருவான இயேசுவின் சீடராக மனதை மாற்றி பணியில் பற்றுறுதியுடன் உயிர்ப்பு வாழ்வு மலர துணைக்கரங்களாக மாறுங்கள்.

எந்த உதவிகளும் உரையாடல்களும் சொந்த இதயங்களின் மனக்காயத்தை ஆற்றவேண்டும். இதுவும் இன்றைய காலத்தின் முக்கிய தேவைதான். இவற்றைப் பிறநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய முடியாது. இதனைக் கொடுப்பதில் கஞ்சல்தனம் காட்டாதீர். இதற்கு அறிமுகம், பக்கச்சார்பு, சலுகை, அன்பளிப்பு என எதிர்பார்ப்பதை விட்டு இனிமையான உரையாடல்களால் நீங்கள் செய்யும் பணி இரட்டிப்பு ஆறுதலைக் கொடுக்க உதவுமல்லவா? இதுவும் ஓர் ஆற்றுப்படுத்தலின் வெளிப்பாடுகளே!

ஐந்து நட்சத்திர ஹோட்டலில் உணவு அருந்துவதைவிட, ஓலைக் குடிசையில் ஒரு குவளை தேநீர் அருந்துவதில் ஏற்படும் மகிழ்ச்சி ஒரு தனிரகம். அவர்கள் காட்டும் அன்பு உபசரிப்புக்களால் தான் உயர்வு பெறுகிறது.

இவைபோன்றதே துன்புறுவோர் மட்டில் யேசுவைக் காண்பது. இதனைக் காண்கிற ஒவ்வொரு இதயத்தின் முன்பும் பசியாய் இருந்தேன், தாகமாய் இருந்தேன், ஆடையின்றி இருந்தேன், நோயுற்று இருந்தேன், இல்லிடமின்றி இருந்தேன் என்ற நிலையில் இவர்களுக்கு நீங்கள் எது செய்தபோதும் எனக்கே செய்தீர்கள் என்ற இறை வார்த்தையின் தொனி உங்கள் மனங்களில் உரத்துப் பேசும். இதுவே ஆலயத்தில் தேடிய இறைவனை நேரில் சந்திக்கும் சந்தர்ப்பங்களாக எண்ணிச் செயல்படுவதில் விழிப்பாய் இருங்கள்.

“என்னோடு ஒருமணி நேரம் விழித்திருக்க உங்களால் இயலாமல் போனதோ என கெஸ்தமெனித் தோட்டத்தில் துன்புற்று இருக்கும் இயேசுவின் குரல் ஒலி இன்றும் உங்கள் அருகில் ஒலிக்கிறதை உணர்வீர்களா? உலக மாயையில் உறங்கிய வராய்த் துன்புறும் மனிதத்தின் மூலம் இயேசுவின் குரல் ஒலி கேட்காமல் மாயக்கவர்ச்சிகளில் மூழ்கித் துன்புறாது நிவாரணங்களுக்காக அலையும் தண்டல் கூட்டமாக சுயநலத்தில் பகைமைகளை வளர்த்தால் சிலுவையின் பாடுகளில் சிதறப்பட்ட மனிதத்தின் குரல் கேட்காமல் போனதோ!

செபம் - தவம் - தியானம் - வழிபாடுகள் என்று வாழ்வின் வெளிப்பாடாகச் செயலுருப் பெற்றதை தானாடாவிட்டாலும் தசையாடும் என மனதுருகி இன - மத - மொழி கடந்து அர்ப்பணத்துடன் செயல்பட்டதை எங்கும் காண முடிகிறது. இவை மேல் எழுந்த உணர்வலையாக அடங்கிவிடாது சுனாமியின் சீற்றத்தின், தாக்கத்தின் அடுத்தகட்ட நகர்வில் அதிக பங்கேற்பும், பக்கத்துணையுடன் நம்பிக்கை வாழ்வை உயிர்ப்பிக்க பணம், பொருட்கள், அன்னிய நாட்டு உதவிகள் மட்டும் போதுமானது என எண்ணி ஒதுங்கிவிடாது சகல மட்டத்திலும் ஆற்ற வேண்டிய அரும் பணிகளினால்தான் பலர வாழ்வு உயிர்க்கமுடியும். அதற்கு எம் வாழ்வை அர்ப்பணிக்க வேண்டும். ★

-யோசப்பாலா-

## இறந்தோருக்கு அஞ்சலி வாழ்வோருக்கு எச்சரிக்கை



அம்மையப்பனே இறைவா
இனம், நாடு, மதம், சாதி, வர்க்கம், நிறம்
நீதிமான், கெட்டவன் என்ற வரையறைகளில் மனிதம்!
நல்லோர் மேலும் தீயோர் மேலும் கதிரவனை உதித்தெழச் செய்கிறவர்
நேர்மையுள்ளோர் மேலும் நேர்மையற்றவர் மேலும் மழை பெய்யச்
செய்கிறவர் (மத்.5:45)
உமக்கும், நீர் எமக்கு தந்த இயற்கைக்கும் எவ்வித
வரையறையுமில்லையே இறைவா!

“நான் அமர்வதையும் எழுவதையும்
நீர் அறிந்திருக்கின்றீர்
நான் நடப்பதையும் படுப்பதையும்
நீர் அறிந்திருக்கின்றீர்” (திருப்பாடல் 139:2,3)
பிணத்தைத்தான் கீறி கிழிக்கிறோம் மரணத்து அத்தாட்சி தேடுகிறோம்
ஏன் மூச்சு வருவது என்பதற்கு அத்தாட்சி இல்லை
எமது இருப்புகளுக்கு அத்தாட்சி இல்லை
எல்லாம் உன் செயல்தான் இறைவா!

தப்பிய அனைவரும் நீதிமானா
என் கணவர் என் மனைவி என் பிள்ளைகள் நீதிமான்கள் இல்லையா
“இக்கலிலேயருக்கு இப்படி நிகழ்ந்தால்
இவர்கள் மற்றெல்லாக் கலிலேயரை
விட பாவிகள் என்று நினைக்கிறீர்களா” (லூக் 13:2)
உமது வார்த்தையே எனக்கு ஆறுதல்
உமது வழிகளை காண்பியும் இறைவா

“ஆண்டவரே நீர் இங்கே இருந்திருந்தால்
என் சகோதரன் இறந்திருக்கமாட்டான்” (யோவான் 11:21)
மார்த்தா கேட்ட அதே கேள்வி
என் கணவர் என் மனைவி என் பிள்ளைகள்
நீர் மார்த்தாவின் வினாவுக்கு விடை தரவில்லையே
அதேபோலவே எனக்கும் இறைவா!

என்னிடம் நம்பிக்கை கொள்பவர்கள் இறப்பினும் வாழ்வர்
கல்லை அகற்றச் சொன்னீர் ஆண்டவரே
மார்த்தாவின் மனிதம் மறுத்ததுதான்
“நீ நம்பினால் ஆண்டவனின் மாட்சிமையை காண்பாய்
என நான் உன்னிடம் கூறவில்லையா?” (யோவா 11:40)
என் மனதில் கல்லாக உள்ள அவநம்பிக்கை
அகல அருளை தா இறைவா!

“நண்டுகள் வந்து படங்கள் கீறும்
அலைகள் வந்து அழிக்கும்” என்று மகா கவி பாடினான்
சுனாமி அலைகள் எமது நெஞ்சங்களில் வடுக்களை கீறியதோ
உமது அருளலைகள் எனது மன வடுக்களை அழிக்கும் - இறைவா

-சா.பி.கிருபானந்தன்-




நிலவிருந்தும்
நமது இராக்காலம்
விடிகிறது பார்
பட்ட மரத்தில் சுற்றி
வட்டக் காளான் துளிர்
நம்பிக்கையூட்டும்
கொக்கக் கோலாக் கனவுடன்
கஞ்சி குடிக்கும் தம்பி
சிரட்டையைத்தான்
முறைப்பான்
கிபிருக்கும் புக்காராவுக்கும்
பழக்கப்பட்ட எமக்கு
சுனாமி எதிர் பாராததுதான்
கடவுளையும்
மனித நேயத்தையும்
உணர்திப் போவதற்கு
இராட்சத அலைகளிற்கு
என்ன உரிமை
பாலகரைப் பறிக்க...
செல்வங்களை அள்ளிப் போன
கடலன்னை மீண்டும்
அள்ளித் தருவாள்!
ஏதோ ஒரு செய்தியை
சொல்லிய தாயிற்று
கடல் மீதும் கடவுள் மீதும்
வெறுப்பில்லை
யுத்தம் செய்யும் கலைகள்
உணர வேண்டும்
உரிமைகளை மீறிடவோ
அடிமைத்
தனத்தை தூவிடவோ
இரத்த ஆறு பாய்ந்து
துப்பாக்கிகள் சிரிக்குமானால்
இன்னுமொரு சுனாமியை
கண்ணெதிரே காணலாம்
அது அழிக்க வேண்டியவர்களை
மட்டுமே அளிக்கும்
அப்பாவி மக்களிற்கு
ஆட்சியும் மாட்சியும்
புதிதாய் துளிர்க்கும்
கொம்பியூட்டருக்குள் என் தம்பி
நிகராய் எழுவான்
கையில் மவுசிருக்கும்
எம் வாழ்க்கையில்
உலகம் வியக்கும்

ஜோ.ஜெஸ்ரின்

## ஏன் இப்படிச் செய்தாய்!

கடற்தாயே கடற்தாயே
ஏன் இப்படி செய்தாய்!
நாம் என்ன பாவம் செய்தோம்
ஏன் இப்படி செய்தாய்!
மீனவர்களின் மனம் வாட
ஏன் இப்படி செய்தாய்!

மக்களின் இறப்புகள் எத்தனையோ!
மக்களின் அழுகைகுரல்கள்தான்
எத்தனையோ!
இனிமேலும் இதைச் செய்வாயோ
கடல் அன்னையே பதில் கூறு

இது சரி தானா
இல்லை பிழைதானா
நான் கடற்கரையோரமாக வாழ்வது
இனியும் இப்படி செய்தால்
நாம் எங்குதான் வாழ்வது?
கடல் அன்னையே பதில் கூறு!

வாழ்வதற்காய் கட்டிய வீட்டை அழித்தாய்
உண்பதற்காக வைத்த உணவை
அழித்தாய்
நாம் அஞ்சுகின்றோம்
நாம் வாழ்கிறோம்
இனிமேலும் இப்படி செய்வாயா

அன்ரன் ஜெறான்
தூய பேதுரு கல்லூரி
கொழும்பு

## அவலத்தின் உச்சியிது!

குவலயத்தைக் குதறிமனங் குளிர்ந்த சுனாமி!
கண்ணீரில் உறவுகளா தேட வைத்தாய்?
தவமிருந்து பெற்றெடுத்த குழந்தை தன்னைத்
தாரைவார்க்கத் தாயிதயம் தாங்குவாளா?
கவலைகளும் அழுகுரலும் தானோ வாழ்வு?
கதிகலங்கித் துடிப்பதைப்பார் மனிதப் பூச்சி!
அவலத்தின் உச்சியிது! கால இதழ்கள்
உதிர்ந்தாலும் கண்ணைவிட்டு மறைந்து போமோ!

நிலம்மூடி உயிர்பறிக்க ஏனோ இந்த
நிகூஷ்டூர வெறியுனக்கு! இரும்பா நெஞ்சம்!
புலம்பலொலி வானத்தைக் கீற இளைய
பாலருக்கோ சிலுவையேற்றம்! ஆற லாமோ?
விலங்குக்கோ கருணைசெய்ய மனிதம் உண்டு
விதியிழந்த மனிதனுக்குத் துணைதான் யாரோ!
துலங்குகின்ற ஒருண்மை சொல்வேன்! நேரும்
துயர்வெல்லத் தலைவனடி நம்பி வாழ்வோம்!

-மு.சிங்கராயர்-

## மனித துயரங்களில்...

(01ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. இயற்கையை சரிவரப் பாதுகாக்காத வகையில் இந் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இந்நிலையை உபயோகித்து நாம் கடவுளை பக்கச்சார்பு உள்ளபராக மக்களுக்கு விளங்கி கூறக்கூடாது. கடவுள் அன்புள்ள கடவுளாகச் செயற்படுகின்றார் என்பது தான் உண்மை.

மரித்தவர்களைப் பொறுத்த வரையிலே இவர்கள் மீட்பு பாதையில் கிறிஸ்துவுடன் இணைந் தவர்கள் என்பது புலனாகின்றது. கிறிஸ்து பிறந்தவுடன் பட்சிளம் குழந்தைகள், கொல்லப்பட்டார்கள். எனவே, அப்பச்சிளம் குழந்தைகள் தங்களை மீட்புத் திட்டத்தில் இணைந்து கொண்டார்கள். இதைப்போலவே சுனாமி தாக்கத்தினால் இறந்தவர்களும் மீட்புத் திட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டார்கள்.

உங்கள் ஆக்கங்கள், செய்திகள், விமர்சனங்களை அனுப்புங்கள். தெளிவு கண்டு பிரசுரிப்போம்.
அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், தெளிவு,
குரு முதல்வர் காரியாலயம்,
452, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
The Editor - Thelivu,
Archdeacons Office,
452, Main Street, Jaffna.

## பரியோவான் ஆலயத்தின் சமூகப்பணிகள்

**சுண்டுக்குளி** பரியோவான் ஆலயத்தைச் சேர்ந்த ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகள், சிறுமந்தை, வாலிபர் ஐக்கியம், பெண்கள் ஐக்கியம், ஆண்கள் ஐக்கியம் ஆகியவற்றின் அங்கத்தவர்களும், 3 குருமாரும் எல்லாமாக 50 பேர் ஜனவரி 14 ஆம் திகதி வெள்ளியன்று விவசாயிகளுக்கு நன்றி செலுத்தும் வழிபாடு முடிவடைந்ததும் 10 மணியளவில் குருவானவரின் ஜெபத்துடன் புறப்பட்டோம்.

அன்றைய எமது மதிய உணவைத் தருமபுரம் “கானான் சிறுவர் இல்லத்தில்” முடித்துக்கொண்டு பிற்பகல் முல்லைத்தீவு கடற்கரை நோக்கி நகர்ந்தோம். அங்கு ஆழிப்பேரலையால் (Tsunami) ஏற்பட்ட அழிவுகளைச் சுற்றிப் பார்த்தோம். கடற்கரையை அண்மித்து இருந்த கத்தோலிக்க தேவாலயம் உட்பட அநேக கட்டடங்கள் இருந்த இடம் தெரியாது உருக்குலைந்திருந்தன.

அங்கிருந்து தண்ணீரூற்று ‘பரி மத்தியா’ ஆலயத்துக்குச் சென்று அங்குள்ள விசுவாசிகள் சிலருடன் கலந்துரையாடி, எமது அன்பைப் பரிமாறினோம். அவர்கள் தேநீர் கொடுத்து எம்மை உபசரித்தனர். பின் Dr.ஜெயகுலராஜா குடும்பத்தைச் சந்தித்து அவர்களின் Mini Zoo வையும் பார்வையிட்டோம்.

இதன் பின் ‘கேப்பா பிலவு’ என்னும் இடத்துக்குச் சென்றோம். இங்கு 68 குடும்பங்கள் இருக்கின்றன. இவர்கள் 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்டவர்கள். இவர்கள் தஞ்சமகோரி 1996 ஆம் ஆண்டுவரை A.C. Farm என்னும் இடத்தில் இடம்பெயர்ந்து இருந்தனர். பின்பு அந்தக் காலப்பகுதியில் நடைபெற்ற இராணுவ நடவடிக்கையினால் மீண்டும் இடம்பெயர்ந்து தண்ணீரூற்றுக்கு அண்மையிலுள்ள ஒரு கிராமத்தில் முஸ்லீம் மக்களின் வீடுகளில் குடியேறினர். “சமாதான ஒப்பந்தம்” கைச்சாத்திடப்பட்ட பின்னர் முஸ்லீம் மக்கள் மீண்டும் தமது இல்லங்களுக்குக் குடிவருவார்கள் என்ற அச்சம் காரணமாக அரசாங்கத்திடம் விண்ணப்பித்து, கேப்பாபிலவு என்னும் இடத்திலுள்ள காட்டைத் திருத்தித் தற்போது சிறு வீடுகள் அமைத்துத் தங்கியுள்ளனர். இவர்கள் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் தலா ரூபா 700 பெறுமதியான அன்பளிப்புகளை எமது ஆலயத்தின் சார்பாக அளித்தோம். எமது பிரசன்னம் அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. அவர்கள் தமது அன்பை எமது சபை மக்கள் யாவருக்கும் தெரியப்படுத்தியதுடன் மீண்டும், மீண்டும் எம் யாவரையும் அங்கு வந்து செல்லுமாறு கூறினர்.

அன்று இரவை கருணா நிலையத்தில் கழித்துவிட்டு 15 ஆம் திகதி காலை “ஜெயபுரத்தில்” இயங்கும் சிறுவர் இல்லம் நோக்கி நகர்ந்தோம். இங்கு திரு. பவன் அவர்களின் பாதுகாப்பில் 17 ஆண் பிள்ளைகள் உள்ளனர். எமது ஞாயிறு பாடசாலைப் பிள்ளைகள் சார்பில் இவர்களுக்கு நுளம்புவலைகளுடன் கூடிய சிறிய அன்பளிப்புகளையும் வழங்கி னோம். அதன்பின் அங்கு இயங்கும் “ரூத்” சிறுவர் இல்லம், தென்னிந்திய திருச்சபை ஆகியவற்றையும் தரிசித்தோம்

மீண்டும் கிளிநொச்சி வந்து அங்குள்ள இரணைமடுக் குளத்தைப் பார்வையிட்ட பின்னர் கருணா நிலையம் சென்று, மாற்று வலுவுள்ள சில வயோதிகர்களுடனும், அங்கு வளரும் வாலிபப் பிள்ளைகளுடனும் சிறு அன்பளிப்புகள் கொடுத்து எமது அன்பைப் பகிர்ந்து கொண்டோம்.

அங்கு மதிய உணவை அருந்தியதன் பின் தாளையடி, ஆழியவளை, மருதங்கேணி, உடுத்துறை ஆகிய இடங்களிலும் ஏற்பட்ட சேதங்களைப் பார்வையிட்டோம். பின் 6 மணிக்கு அனைவரும் கடவுள் கிருபையால் சுகமே எமது பயணத்தை மீண்டும் ஆலயத்தில் வந்து முடித்துக் கொண்டோம்.

இந்தப் பாரிய பொறுப்பை ஏற்று எம்மில் பலர் ஒருகாலமும் சென்றிராத இடங்களைப் பார்க்கத் தருணம் கிடைத்தது. இந்தப் பயணத்தை வழிபடுத்தியவர்கள் சபைக்குரு அருட்பணி ஏனப்பொன்ராஜா அவர்களும், உதவிக்குரு லலித் லக்ஷேந்திரகுமார் அவர்களும் ஆவர். ★

திருமதி மீ.அருமைநாயகம்
செயலாளர்.

ஆண்டவரே என் ஆயர், எனக்கேதும் குறையில்லை.

இல.452,பிரதான வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ‘தெளிவு வட்டத்’தினால், இல.267,நாவலர் வீதி,யாழ்ப்பாணம். என்னும் முகவரியில் அமைந்துள்ள ‘சுரபி’ பதிப்பகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது. ஆசிரியர்: வீ.பி.தனேந்திரா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org